செ.வெ.எண்.51 நாள்:29.10.2020

**நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தொட்டபெட்டா மற்றும் எப்பநாடு ஊராட்சி பகுதிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் ரூ. 63.32 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும், முடிவுற்ற வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

---

நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தொட்டபெட்டா மற்றும் எப்பநாடு ஊராட்சி பகுதிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் முடிவுற்ற வளர்ச்சி திட்டப்பணிகளை இன்று (29.10.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம் தொட்டபெட்டா ஊராட்சி பகுதியில் மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ. 36.27 இலட்சம் மதிப்பில் தொட்டப்பெட்டா ஜங்சன் முதல் தொட்டபெட்டா பீக்ரோடு வரை முடிவுற்ற சாலை பலப்படுத்துதல் பணியினையும், எப்பநாடு ஊராட்சிக்குட்பட்ட கக்குச்சி சாலை முதல் இடுஹட்டி சாலை வரை மூலதனமானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.26.40 இலட்சம் மதிப்பில் முடிவுற்ற சிமெண்ட் சாலை மேம்படுத்துதல் பணியினையும், எப்பநாடு ஊராட்சி எப்பநாடு பகுதியில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.65 ஆயிரம் மதிப்பில் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணியினையும் என மொத்தம் ரூ.63.32 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும், முடிவுற்ற வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப.,அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமாலினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திருமதி.சுஜாதா, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ஸ்ரீதரன், திரு.ஜெயசங்கர், உதவி பொறியாளர் திரு.கிருஷ்ணபிரகாஷ் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.